மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வேப்பந்தட்டை
அசல் வழக்கு எண். 236/2019

**2025–ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 24–ம் நாள் புதன் கிழமை** வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியாகிய PW–1 வது நபரின் வாக்குமூலம்

| | | | |
|---|---|---|---|
| பெயர் | :முத்துசாமி | தொழில் | : விவசாயம் |
| தகப்பனார் பெயர் | : | வட்டம் | :வேப்பந்தட்டை |
| கிராமம் | : | வயது | : /2025 |

**பிரதிவாதி தரப்பில் விசாரணை :**

(I) நான் தற்பொழுது நீதிமன்றத்திலிருந்து வந்த அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். வி.களத்தூர் கிராம சர்வே எண்.89/1ஏ நிலமானது தனி நபருக்கு பாத்தியப்பட்ட நிலம் என்றால் சரிதான் அது அரசாங்கத்திற்கு சொந்தமான நிலம் என்றால் இல்லை. மேற்படி நிலத்தை பயிர் சாகுபடி செய்பவருக்கு தான் அடங்கல் பதிவேடு வழுங்கப்படும் என்றால் சரிதான். தாவா சொத்திற்கு நடேச பயைாச்சி மகன் கிருஷ்ணமூர்த்தி பெயரிலோ அல்லது அவரது குடும்பத்தார் பெயரிலோ எவ்வித ஆவணங்களும் ஏற்படவில்லை என்றால் சரிதான்.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

(I) நான் வி.களத்தூர் VAO ஆக உள்ளேன். தாசில்தாரிடமிருந்து அவரது சார்பாக சாட்சியம் அளிக்க எவ்வித அனுமதி கடிதமும் பெறவில்லை என்றால் சரிதான். மேற்படி நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க எவ்வித அழைப்பாணையும் எனக்கு வரவில்லை என்றால் சரிதான். நீதிமன்றத்திலிருந்து எந்த அழைப்பாணையும் வரவில்லை வட்டாட்சியரிடமிருந்து எந்த கடிதமும் பெறாத நிலையில் எதன் அடிப்படையில் நீங்கள் சாட்சியம் அளிக்கிறீர் என்றால் இந்த நீதிமன்றம் அனுமதித்தன் பேரில் சாட்சியம் அளிக்கிறேன். 1966 ல் சர்வே எண்.89/1 மொத்தம் 4 ஏக்கர் 26 செண்ட்டில் 2 ஏக்கர் பூமிதானத்துக்கு எடுத்துக்கொண்டது போக மீதமுள்ள நிலம் தரிசாக இருந்த விவரம் உங்களுக்கு தெரியுமா என்றால் தெரியாது. சர்வே எண்.89/1ஏ தனிநபர் பெயரில் எதன் அடிப்படையில் பட்டா ஏற்பட்டது என்றால் 30.06.1998 ம் வருடம் கோட்டாட்சியரின் உத்தரவின் பேரில் அருணாச்சலம் மகன் ராயமுத்து, செல்லமுத்து மகன் கருப்புடையார்–2, குமரப்ப உடையார் மகன் ஆரியமுத்து–3, முத்துபடையாச்சி மகன் ராயமுத்து படையாச்சி–4 ஆகியோர் பெயரில் 1927 ல் ஏற்பட்ட செட்டில்மெண்ட் படி பட்டா ஏற்பட்டுள்ளது என்று அ–பதிவேட்டில்

குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி உத்தரவை நீங்கள் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

ii) மேற்படி உத்தரவில் மாரிமுத்து மகன் சாமிராஜ் பெயரை சேர்க்க சொல்லி உத்தரவு போடப்பட்டுள்ளதா என்றால் உத்தரவு இல்லை. கிரையம் அல்லது வாரிசு படி பட்டா மாரியிருக்க வாய்ப்புள்ளது மேற்படி கிரையம் மற்றும் வாரிசு அடிப்படையில் பட்டா மாற்றம் செய்தால் ந.க.எண் வழங்கி பட்டா மாற்றம் செய்வார்கள் என்றால் சரிதான். எதன் அடிப்படையில் பிரதிவாதி பெயரில் பட்டா மாறியதை என்பதை தெரிவிக்க என்னிடம் ஆவணங்கள் ஏதும் இல்லை அலுவலகத்தில் பார்த்தால் தெரியும்.